IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:199/2013

**DEP OF WITNESS: PW1**

NAME: MuhamadZayeem RELIGION:

FATHER NAME: CASTE:

VILLAGE: OCCUPATION:

TALUK: AGE:

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 01-11-2018

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை:-

1-ம் வாதி சலீம் பாஷா எனது தகப்பனார். 29.09.2013-ம் தேதியில் எனது அப்பா இறந்துபோனார். அவருடைய இறப்புச்சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாரிசு சான்றிதலும் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை ஆரம்பத்தில் எனது அப்பா சலிம் பாஷா தான் 30.08.2013-ம் தேதியில் தாக்கல் செய்தார். எங்களுடைய சொத்து எங்களுக்கு சேர வேண்டும் என்று எனது தந்தை தாக்கல் செய்துள்ளார். வழி பாத்தியம் கோரியும் தாவா தாக்கல் செய்துள்ளார். எனது தகப்பனாரின் வாரிசுகளான 2 முதல் 6 வாதிகளான எங்களுக்கு வழக்கு சொத்தில் இன்றைய தேதியில் உரிமை உள்ளதா என்றால், உரிமை உள்ளது. எப்படி உரிமை உள்ளது என்றால் எனது அப்பா என்ற உரிமையில் உரிமை உள்ளது. 7-ம் வாதிக்கு இன்றைய தேதியில் வழக்கு சொத்தில் உரிமை உள்ளதா என்றால் உரிமை உள்ளது. 7-ம் வாதிக்கு இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 2017-ம் ஆண்டில் வழக்கு சொத்து முழுவதையும் நாங்கள் விற்றுவிட்டோம் என்பதால் வழக்கு சொத்தில் 7-ம் வாதிக்கு உரிமை உள்ளது. 04.09.2017-ம் தேதியிட்ட கிரய பத்திரம் வா.சா.ஆ.11 முன்னிலைக்கு கிரயம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 04.09.2017-ம் தேதியில் கிரயம் கொடுத்த பிறகு வழக்கு சொத்தில் 2 முதல் 6 வாதிகளான எங்களுக்கு பாத்தியம் உண்டா என்றால் எங்களுக்கு எவ்வித பாத்தியமும் இல்லை. அந்த கிரய பத்திரத்திற்கு பின்னிட்டு வழக்கு சொத்து 7-ம் வாதி சலிம் அகமதுக்கிற்கு தான் பாத்தியப்பட்டது. எனது தகப்பனார் வழக்கு சொத்து அவருக்கு சேரவேண்டும் என்று தாக்கல் செய்த வழக்கில் அவர் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளான 2 முதல் 6 வாதிகளான நாங்கள் வழக்கு சொத்தை 04.09.2017-ம் தேதியில் 7-ம் வாதிக்கு விற்பனை செய்துவிட்ட நிலையில் தற்பொழுது எனது தகப்பனார் கோரிய பரிகாரத்தை அவரது வாரிசுகளான நாங்கள் கோர முடியுமா என்றால் சொத்தை நாங்கள் விற்றுவிட்டோம் நாங்கள் பரிகாரம் கோர முடியாது. அதனால் வழக்கு சொத்தை

பொருத்து நாங்கள் 7-ம் வாதிக்கு விற்றுவிட்டதால் 7-ம் வாதிக்கு பரிகாரம் கிடைக்க வேண்டிம் என்று உத்தரவு கோரியுள்ளோமா என்றால் இல்லை. 04.09.2017-ம் தேதியிட்ட கிரய பத்திரம் வா.சா.ஆ.11 ஏற்பட்ட தேதியில் வழக்கு சொத்திற்குரிய மூல பத்திரங்கள் 7-ம் வாதி வசம் நாங்கள் ஒப்படைத்தோமா என்றால் நாங்கள் ஒப்படைக்கவில்லை. வழக்கு சொத்துக்களை காட்டும் வகையில் வழக்குரையோடு தாவா மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 கிரய ஆவணங்களின் மூல ஆவணமாக கிரய ஆவண எண்.3045/1944 என்று அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரய பத்திரங்களை எழுதி கொடுத்த அமினா பீ என்ற அந்த கிரய ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரய ஆவண எண்.3045/1994 ஆவணத்தின் சான்றிட்ட பதிவு நகல் தான் என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் மேற்படி 22.11.1944-ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. இந்த பி.வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் கால்வாய் பாத்தியம் மட்டும் தான் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் வழிபாத்தியம் குறித்த எந்த வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 மூல ஆவணத்தில் வழி பாத்தியம் குறித்து எழுதப்படாத நிலையில் அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்களான வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரய ஆவணங்களில் வழி பாத்தியம் குறித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தை எழுதி கொடுத்த பாத்திமாபீ என்பவருக்கு வழி பாத்தியம் குறித்த உரிமை உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். எந்த தேதியிட்ட பத்திரப்படி பாத்திமாபீக்கு வழி பாத்தியம் குறித்த உரிமை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா 2, 3-ம் அயிட்ட சொத்துக்களுக்கு உண்டான மூல பத்திரம் தான் வா.சா.ஆ.4 கிரய ஆவணம். அந்த வா.சா.ஆ.4 கிரய ஆவணத்தில் வழி பாத்தியம் குறித்து எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 கிரய பத்திரத்தின் மூல பத்திரம் தான் பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான். ஆனால் பி.வா.சா.ஆ.1-ல் வா.சா.ஆ.4 சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/MuhamadZayeem (PW1)

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. C.Senthil Kumar. 01.11.2018.
District. Munsit.